# முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**DW-1- OS. No.39/2017**

2026 ம் ஆண்டுபிப்ரவரி மாதம் 09-ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி Dr.V.ஸ்ரீவித்யா, முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி.ரேணுகா | தொழில் : |
| த/பெ. : திரு.லிங்குதுரை | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

**பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 23.07.2025 | தகவல் உரிமை சட்டத்தின்படி மின்சார வரியத்திடம் இருந்து பெறப்பட்ட Lr.No.PIO/EE/O&M/TEDC/TPR/FM1/F.RTI027/D.No.3009/2025-2026 DT.23.07.2025. (1 பக்கம் மட்டும் அனுமதி) | அசல் | **பிவாசாஆ-1** |
| 2 | | தகவல் அறியும் சட்டத்தின் படி திருப்பூர் மாநகர காவல் துணை ஆணையரியிடம் இருந்து பெறப்பட்ட ந.க.எண்.G2/10276664/2025 | அசல் | **பிவாசாஆ-2** |
| 3 | | வீட்டு வரி ரசீது (11 எண்ணிக்கை) | அசல் | **பிவாசாஆ-3** |
| 4 | | குடிநீர் வரி ரசீது (10 எண்ணிக்கை) | அசல் | **பிவாசாஆ-4** |
| 5 | | ஜி.எஸ்.எல்ஆர் பட்டா பதிவேடு | நகல் | **பிவாசாஆ-5** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1.வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய அம்மா மற்றும் வாதியின் அம்மா இருவரும் சகோதரிகள் என்று சொன்னால் சரிதான். சாட்சி மேலும் மீண்டும் தானாக முன்வந்து தானும் வாதியின் அம்மாவும் சகோதரிகள் என்று கூறுகிறார். தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு என்னென்ன ஆவணங்கள் பார்த்தேன் என்று கேட்டால் தற்போது ஞாபகம் இல்லை.

2. வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்று கேட்டால் ஆமாம். மேற்சொன்ன வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்து இருக்கிறேனா என்றால் இல்லை. தாவாசொத்தை செல்வி எந்த வருடத்தில் கிரயம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதி வீடு கட்டினாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது.3–வது பிரதிவாதி என்னுடைய கணவர் தான். என் கணவர் சௌமியா ஸ்டில்ஸ் என்ற பெயரில் கட்டடம் முறுக்கு கம்பி மொத்த வியாபாரம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

3.வாதியின் கணவர் குமரேசன் என் கணவரின் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார் என்று சொன்னால் சரிதான். பொது அதிகார முகவரான தசரதன் என்பவரிடமிருந்து தான் வழக்கு சொத்தை கிரயம் வாங்கினேன். வாசாஆ–7 பொது அதிகார பத்திரத்தில் தாவா சொத்தானது காலியிடம் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் சொன்னால் சரிதான். பொது அதிகார பத்திரத்தில் வாதி தாவா சொத்தை சுவாதீனம் கொடுத்து இருப்பதாக எங்கேயும் எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல அப்படித்தான் எழுதி இருக்கிறது.

4. வாதி எனக்கு வழக்கு சொத்தை சுவாதீனம் கொடுத்தாரா என்று கேட்டால் வாதி ஸ்வாதீனம் கொடுக்கவில்லை பொது அதிகார முகவர் மட்டுமே சுவாதீனம் கொடுத்தார். வாதி பொது அதிகார முகவருக்கு சுவாதீனமே கொடுக்காத போது நான் பொது அதிகார முகவரிடமிருந்து சுவாதீனம் பெற்றதாக பொய்யாக வழக்கிற்க்காக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5.நான் குறிப்பிடும் தசரதன் என்ற நபர் திருப்பூர் மார்க்கதர்சி சீட்டு நிதி நிறுவனத்தில் மேலாளராக இருக்கிறார். நானும் என் கணவரும் மார்க்க தரிசி சீட்டு நடத்தும் நிதி நிறுவனத்தில் 50 லட்சம் மற்றும் ஒரு கோடி ரூபாய் சீட்டு போட்டு இருந்தோம் என்று சொன்னால் ஆமாம். சீட்டு வரவு செலவு மூலமாகத்தான் தசரதன் எங்களுக்கு பழக்கம் என்றும் சொன்னால் சரிதான். நான் வழக்கு சொத்தை கிரயம் வாங்க வேண்டியது என்றால் நேரடியாகவே வாதியான செல்வியிடம் இருந்து வாங்கி இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. செல்வி ஏற்கனவே பொது அதிகார முகவருக்கு அதிகாரம் கொடுத்து விட்டார்.

6. நான் என்னுடைய எதிர் வழக்குறையில் செல்வி சுமார் பத்து ஆண்டுகளாக தாவாசொத்தில் வாடகைக்கு இருப்பதாகத்தான் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம். வாடகை பாக்கியை வசூல் செய்வதற்கு செல்வி மீது வழக்கு எதுவும் போட்டு இருக்கிறேனா என்று கேட்டால் இல்லை. இந்த வழக்கில் எதிர் கோரிக்கை தாக்கல் செய்திருக்கிறேன். அதில் 10 வருடங்கள் வாடகை பாக்கி எனக்கு வாதி தரவேண்டும் என்றும் கோரியிருக்கிறேன்.

7. பொது அதிகார பத்திரம் மற்றும் என்னுடைய கிரைய பத்திரத்தில் காலி இடம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறது என்ற போது எப்படி குடிநீர் வரி மற்றும் சொத்து வரி ஆகியவை கட்டியிருக்கிறேன் என்று கேட்டால் அங்கே ஏற்கனவே வீடு இருக்கிறது அதனால் கட்டியிருக்கிறேன். காட்டப்படும் வழக்கறிஞர்

அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டது தான் அதில் இருக்கும் ஒப்புகை சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் **வா.சா.ஆ–9 மற்றும் வா.சா.ஆ–10** அவை முறையே என்றும் அதில் இருக்கும் கையெழுத்து என்னுடையது தான் மேற்படி **வா.சா.ஆ–9 மற்றும் வா.சா.ஆ–10** ஆவணங்களுக்கு பதில் அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

**குறுக்கு விசாரணைத் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.